# பெறுமதிசேர் வரி

## யார் வரி செலுத்தும் பொறுப்புடையவர் ? (பிரிவு - 2 )

1.இலங்கையில் வரி செலுத்ததக்க நடவடிக்கையை மேற்கொள்வதற்கான வரிக்கு பதிவு செய்யப்பட்டவரால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு வரிவிதி வழங்கல்கள் மீதும் வரிவிதிகாலப்பகுதியில் வழங்கள் மேற்கொள்ளப்படும் போது வரி அறவிடப்படும்.

2. யாரேனும் ஆளாள் இலங்கைக்குள் இறக்குமதி செய்ய்பப்படும் பொருட்கள் மீதும் வரி அறவிடப்படும்

**வரிவிதி வழங்கல் என்பது யாது?**
வரிவிதி வழங்கல் என்பது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சுழிய வீதவரிக்குரிய வழங்கல் உள்ளடங்களாக விலக்கப்பட்ட வழங்கல்கள் தவிர்ந்த வரிவிதிக்கத்தக்க பொருட்கள், சேவைகளை வழங்களைக் குறிக்கும்.

**"பொருட்களின் வழங்கல்" என்பது யாது?**
"பொருட்களின் வழங்கல்" என்பது பொது ஏலத்தில் பொருட்களை விற்றல் தவணைக்கட்டண உடன்படிக்கையில் பொருட்களை மாற்றல், கடனுக்கு பொருட்கள் விற்றல் மற்றும் வரிவிதி நடவடிக்கையிலிருந்து வரிவிதியா நடவடிக்கைக்கு பொருட்களை மாற்றல் உள்ளடங்களாக ஒரு பொருளுக்கான உரிமையை ஏதேனும் எழுத்தில் உள்ள சட்டத்தின் கீழ் மாற்றுவதை குறிக்கும்.

**"சேவைவழங்கல்"** என்பது யாது?

**"சேவைவழங்கல்"** என்பது பொருட்கள் வழங்கல் அல்லாத இழப்புக்கான நிலுவை உள்ளடங்களான ஏதேனும் வரியிடத்தக்க வழங்கலைக் குறிக்கிறது.

**"வரிவிதிகாலம்"** என்பது யாது?

(a) ஒருமாதகாலம் என்பது, அக்காலத்தில்,

- ஒரு ஆள் சுழியவீதம் இடப்பட்ட வழங்களை மேற்கொள்ளல். (ஏற்றுமதி)
- ஒரு ஆள் செயற்திட்ட அமுல்ப்படுத்தல் காலத்தில், இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றில் இருத்தல்.
- பெறுமதிசேர் வரி சட்டத்தின் பிரிவு 22 (7) இன் கீழ் பதியப்பட்டு இருத்தல்.
- ஆடை கோட்டா சபை ஏற்றுமதிஅபிவிருத்தி சபை இன் கீழ் பதிவுசெய்தஒருவர் இவற்றின் கீழ் பதியப்பட்டஏற்றுமதியாளனுக்குவழங்கல் மேற்கொள்ளும் போது

(b) A இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தவிர்ந்தமற்றையவர்களுக்கு 3 மாதகாலம்.

**பொருட்கள் சேவைகளின் வழங்கலின் பெறுமதியாது?**

பெறுனர் பதியப்பட்டவராயின்,

- ✓ பெறுமதிபணமாகவழங்கப்பட்டால்
  - மொத்தப்பெறுகை– பெ.சே.வ அல்லது
  - திறந்தசந்தைப் பெறுமதி

இவற்றுள் கூடியதொகை

- ✓ பணத்திற்குகைமாற்றப்படாதவிடத்து

  திறந்தசந்தைப்பெறுமதி

பெறுனர் பதியப்படாதவராயின்,

- மொத்தப்பெறுகை (பெ.சே.வ. உடன்) அல்லது
- திறந்தசந்தைப் பெறுமதி

இவற்றுள் கூடியதொகை

**வழங்கல் காலம் என்பது யாது?**

1) பொருள் வழங்கல் காலமானது பின்வருவனவற்றுள் எதுமுதலில் இடம்பெற்றதோ அக்காலமாகும்.
   (a) வழங்குனரால் வழங்கப்பட்ட பொருள் தொடர்பில் விலைப்பட்டியல் வழங்கப்படல்.

   (b) வழங்குனரால் கொடுப்பனவு பெறப்பட்ட காலம்.

   (c) பொருள் வழங்கலுக்கான கொடுப்பனவு நிலுவையாக உள்ள காலம்

   (d) பொருள் ஒப்படைக்கப்பட்ட காலம்

எனினும் பட்டியலானது பொருள் வழங்கப்பட்டு 10 நாட்களுக்குள் பிறப்பிக்கப்படுமாயின் அப்பொருள் வழங்கல் காலமாக பட்டியல் பிறப்பிக்கப்பட்டகாலம் கொள்ளப்படும்.

2) சேவை வழங்கல் காலம்,பின்வருவனவற்றுள் முதலில் இடம்பெற்றது.

   (a) சேவை வழங்கப்பட்ட காலம்

   (b) சேவைதொடர்பில் அல்லது எதிர்கால சேவை தொடர்பில் பணம் பெறப்பட்டகாலம்.

   (c) சேவை அல்லது எதிர்கால சேவை தொடர்பில் கொடுப்பனவு நிலுவையான காலம்

   (d) சேவைதொடர்பில் பட்டியல் வழங்கப்பட்டகாலம்

எனினும் பட்டியலானது சேவை வழங்கப்பட்டு 10 நாட்களுக்குள் பிறப்பிக்கப்படுமாயின் அச்சேவை வழங்கல் காலமாக பட்டியல் பிறப்பிக்கப்பட்டகாலம் கொள்ளப்படும்.

**வரிப்பதிவுக்கு பொறுப்புடையவர்கள் யாவர்?**

01-01-2015 இலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல் பெறுமதியை விட கூடும் வழங்கல்கள் கட்டாயம் பதிவுசெய்யப்படவேண்டும்.

வரிவித ிகாலத்தின் படி (1 மாதம் / 3 மாதம்)- ரூ. 3,750,000

ஆண்டுக்கு- ரூ. 15,000,000

**யார் காசு அடிப்படையைப் பயன்படுத்தலாம்?**

பிரிவு 23 இன் கீழ் கட்டுமானதுறையில் உள்ளோர் உள்ளடங்களான சேவை வழங்குனர்கள் காசு அடிப்படிடையில் கணக்கை தயாரிக்க தலைமை ஆணையாளரிடம் விண்ணப்பிக்கலாம். அவர் அனுமதிபெறாமல் காசு அடிப்படையை பின்பற்றல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**பயன்படுத்ததக்கவரிவீதங்கள் யாவை?**

**பெ.சே.வ**

சுழியவீதம் 0% (பிரிவு 7)

நியமவீதம் 11%

சிறப்புவீதம்- சிலதுண்டுப் பொருட்களுக்கு சிறப்பு வீதங்கள் காணப்படுகின்றன (உள்ளுர் சந்தையில் விற்கப்படும் ஏற்றுமதிக்காக உற்பத்திசெய்யப்பட்ட ரூ. 25 பெறுமதியான ஆடைத்துண்டு மற்றும் ரூ. 40 பெறுமதியான ஒரு கிலோகிராம் பருத்திதுணி ரூ. 40. இவை முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட ஆடைத் தொழிலகங்களால் விற்பனை செய்யப்படுகின்றன).

**வரிப்பட்டியலின் கூறுகள்**

(a) வழங்குனரின் பெயர், முகவரி மற்றும் பதிவெண்
(b) வழங்கப்பட்டவரின் பெயரும் முகவரியும்
(c) வரிப்பட்டியல் வழங்கப்பட்டதிகதியும் தொடர் இலக்கமும்
(d) வழங்கல் செய்யப்பட்டதிகதியும் பொருட்கள் சேவைகளின் விபரமும்
(e) வழங்கல் தொகை
(f) வழங்கலின் பெறுமதிமற்றும் வரிஅறவீடுமற்றும்
(g) **வரிப்பட்டியல்** என்றசொல் முக்கியமான இடத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல்.

**வரித்திரட்டைக் கோவையிடல்**

ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட ஆளும் வரிவிதிகாலப்பகுதி முடிவடைந்த மாதத்தில் அடுத்த மாதத்திற்கு பின்னான மாதத்தின் இறுதி நாளுக்கு முதல் சமர்ப்பித்தல் வேண்டும்.

**உற்பத்தியாளர்**

- மாதாந்த வரிவிதி காலம் -
  வரிவிதிகாலம் முடிவுற்று அடுத்தமாதத்தில் 20 ஆம் நாளுக்குமுன்

- காலாண்டுவரிவிதிகாலம் -
  மாத அடிப்படையின் 2 ஆம் மாதத்தின் 20 ஆம் நாள் 3 ஆம் மாதத்தின் 20 ஆம் நாள் மற்றும் மீத ிகாலாண்டு முடிவடைந்து அடுத்த மாதத்தின் 20 ஆம் நாள்

**உற்பத்தியல்லாதோர்**

ஒவ்வொரு 15 ஆம் நாளிலும் பின்வரும் அடிப்படையில் ஒப்புவிக்கவேண்டும்.

- ஒருமாதத்தின் முதல் 15 நாட்களுக்கும் மாதத்தின் இறுதிநாளில்
- ஒருமாதத்தின் 16 ஆம் நாளிலிருந்தான காலத்துக்கு, அடுத்த மாதத்தின் 15ஆம் நாளுக்கு முன்.
- இறுதிச் செம்மையாட்கள்கள் காணப்படின் அவற்றைத் திருத்தி ஒப்புவிக்கவேண்டும்.

**வரிக்கணிப்பு**

- கணிப்புக்கானஅடிப்படைச் சமன்பாடு

செலுத்தவேண்டியவரி = வெளியீட்டுவரி - உள்ளீட்டுவரி

**உதாரணம் 01**

ABC நிறுவனம் உள்ளூர் சந்தைக்கு மென் விளையாட்டுப் பொருட்களை உற்பத்திசெய்கிறது. 31 திசம்பர் 2015 இல் முடிவடையும் காலாண்டிற்கான ஊடுசெயல்கள் கீழே தரப்பட்டுள்ளன பதியப்படாதவருக்கான விற்பனை தவிர்ந்த அனைத்து ஊடு செயல்களும் காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பதியப்பட்டவருக்கு விற்பனை | ரூ. 4,500,000 |
| பதியப்படாதவருக்கான விற்பனை (வரியுடன்) | ரூ. 1,665,000 |
| ஆலைக்கான வரிபதனாக்கிக் கொள்வனவு | ரூ. 850,000 |
| மின்சாரம் | ரூ. 112,000 |
| சம்பளமும் கூலியும் | ரூ. 1,250,000 |
| பதியப்பட்டவரிடமிருந்து மூலப்பொருட்கொள்வனவு | ரூ. 3,400,000 |

30-12-2015 இல் முடிவடையும் காலாண்டுக்கான வரி நிறுவனங்களைக் கணிக்க.

## விடை

| | | |
|---|---|---|
| புதியப்பட்டவருக்கானவிற்பனை | 4,500,000 × 11% | 495,000 |
| புதியப்படாதவருக்கானவிற்பனை | 1,665,000× 11%<br>111% | 165,000 |
| **மொத்தவெளியீடு** | | **660,000** |
| ஆலைக்கானவளிப்பதனாக்கிக் கொள்வனவு | 850,000 × 11% | 93,500 |
| மின்சாரம் | விலக்கு | |
| சம்பளமும் கூலிகளும் | விலக்கு | |
| பதியப்பட்டவரிடமிருந்து மூலப்பொருள் கொள்வனவு | 3,400,000 × 11% | 374,000 |
| **மொத்தஉள்நாட்டுவரி** | | **467,500** |
| வரிநிலுவை | 660,000 -467,5000 | 192,500 |

- **உள்நாட்டு வரிவரவு**

1. பயணத்துக்கு (வணிகம் அல்லது தனிப்பட்ட) பயன்படும் மோட்டார் ஊர்திகளுக்கு உள்ளீட்டுவரவு வழங்கப்படுவதில்லை. இது திருத்தம் ,குத்தகை, வாடகை, காப்புறுத ிபோன்றவற்றை உள்ளடக்கும்.
2. வரிவிதி நடவடிக்கைகளுடன் தொடர்புபடாத பொருட்கள் அல்லது சேவைகள் கொள்வனவு உள்ளீட்டுவரியைக் கோர முடியாது.
3. பொதுவில் வரிவிதி வழங்களுடன் தொடர்புபட்ட உள்ளீட்டுவரியை கழிக்கக்கூடிய போதிலும் விலக்கப்பட்ட வழங்களுடன் இவ்விரண்டுவகையான வழங்கள்களையும் கொண்டிருப்பின் விகிதஅடிப்படையில் கழிப்பனவு வழங்கப்படும்.
4. சரியான வரிப்பட்டியல் இல்லாத கொடுக்கல் வாங்கல்களுக்கு உள்ளீட்டுவரியை கழிக்க முடியாது
5. வரிவிதிகாலத்துக்கு வெளிப்படுத்தப்பட்ட வெளியீட்டு வரியின் 100% க்கு அனுமதிதகு உள்ளீட்டுவரி மட்டுப்படுத்தப்படும் மிகுதி உள்ளீட்டுவரிகளை அடுத்துவரும் ஆண்டுகளுக்கு

முன் கொண்டு சென்று மேற்கூறப்பட்ட மட்டுப்பாட்டின் அடிப்படையில் கோரலாம். பின்வருவனவற்றுக்கு இம் மட்டுப்பாடு செல்லுபடியாகாது.

- சுழிய வீதவரி வழங்கல்
- நிறுத்தப்பட்ட வரிவிதி வழங்கள்
- பிரிவு 22 (7) இன் கீழ் பதியப்பட்டவருடன் தொடர்புபட்ட பொருட்கள் சேவைகள் செயற்றிட்டங்களின் அமுல்படுத்தற் காலத்தில்

**உதாரணம் 2**

31-12-2015 இல் முடிவடைந்த காலாண்டுடன் தொடர்புபட்ட DEF நிறுவனத்தின் வழங்கல் தொடர்பான விபரங்கள்

| | |
|---|---|
| உள்ளூர் விற்பனை–விலக்கப்பட்ட வழங்கள் | ரூ. 1,450,000 |
| உள்ளூர் விற்பனை–வரிப்பொறுப்பு வழங்கள் | ரூ. 5,800,000 |

உள்ளீட்டு வரி விபரங்கள் கீழ்வருமாறு

| | |
|---|---|
| மூலப்பொருள் இறக்குமதி மீது | ரூ. 245,000 |
| வரிப்பொறுப்பு வழங்களுக்கான பொதிபொருள் மீது | ரூ. 12,000 |
| விலக்கப்பட்டபொருள் உற்பத்திக்கானஉள்ளூர்க் கொள்வனவு | ரூ. 25,000 |
| மகிழுர்ந்தின் திருத்தம் மீது | ரூ. 15,000 |
| பணிமனைச் செலவின் மீது | ரூ. 45,000 |

31.12.2015 இல் முடிவடைந்த காலாண்டுக்கான வரிநிலுவையைக் கணிக்க

## விடை

<u>வெளியீட்டுவரி</u>

| | | | |
|---|---|---|---|
| உள்ளூர் விற்பனை | ரூ. 1,450,000 –விலக்கு | | |
| உள்ளூர் விற்பனை–பொறுப்பு | ரூ. 5,800,000 × 11% | | <u>638,000</u> |
| | | | 638,000 |

<u>உள்ளீட்டுவரி</u>

| | | | |
|---|---|---|---|
| மொத்தஉள்நாட்டுவரி | | | 342,000 |

<u>கழி–அனுமதிக்காத உள்ளீட்டு வரி</u>

| | | | |
|---|---|---|---|
| பொறுப்பு வழங்களுக்கான பொதிப்பொருள் - முழுமையாக கோரலாம் | | | |
| விலக்கப்பட்ட பொருட்களுக்கான உள்ளூர்க் கொள்வனவு | | 25,000 | |
| மகிழுர்ந்துத் திருத்தம் | | 15,000 | |
| <u>வரிவிதியற்ற வழங்கள் × உள்ளீட்டுவரி</u> | <u>1,450,000</u>× (245,000 + 45,000) | <u>58,000</u> | <u>98,000</u> |
| மொத்தவழங்கல் | 7,250,000 | | |
| அனுமதிதகுஉள்ளீட்டுவரி | | | **244,000** |
| நிலுவைவரி | 638,000 – 244,000 | | 394,000 |

**உதாரணம் 3**

31-12-2015 இல் முடிவடைந்த காலாண்டுக்கான ரோஜா கம்பனியின் வழங்கள் விபரங்கள்

| | |
|---|---|
| நேர் ஏற்றுமதி | ரூ. 1,500,000 |
| உள்ளூர் விற்பனை- விலக்கப்பட்டது | ரூ. 750,000 |
| உள்ளூர் விற்பனை - பொறுப்பு வழங்கள் | ரூ. 3,750,000 |
| | ரூ. 6,000,000 |

உள்ளீட்டுவரி விபரங்கள் கீழ்வருமாறு

| | |
|---|---|
| மூலப்பொருள் இறக்குமதியில் | ரூ. 645,000 |
| ஏற்றுமதிக்கான பொதிபொருள் மீது | ரூ. 20,000 |
| உள்ளூர் கொள்வனவு மீது | ரூ. 67,000 |
| | ரூ. 732,000 |

31-12-2015 இல் முடிவடைந்த காலாண்டுக்கான பெறுமதிசேர்வரி நிலுவையைக் கணிக்க.

**விடை**

| | | | | |
|---|---|---|---|---|
| வெளியீட்டு வரி | | | | |
| சுழிய வீதவழங்கள் | 1,500,000 ×0% | | | - |
| விலக்கப்பட்ட வழங்கல் | 750,000 | | - | |
| பொறுப்பு வழங்கள் - உள்ளூர் விற்பனை | 3,750,000 ×11% | | | 412,500 |
| | | | | **412,500** |
| உள்ளீட்டு வரி | | | | |
| மொத்த உள்ளீட்டு வரி | | | 732,000 | |
| கழி: அனுமதியற்ற உள்ளீட்டு வரி | | | | |
| வரிவிதியற்ற வழங்கல் × உள்ளீட்டு வரி / மொத்த வழங்கல் | $\frac{750,000}{6,000,000}$ × 712,000 | 89,000 | | |
| அனுமதிதகு உள்ளீட்டு வரி | | | | 643,000 |
| மட்டுப்பாடின்றி கோரக்கூடிய உள்ளீட்டு வரி | | | | |
| சுழிய வீதவழங்களுடன் தொடர்புபட்டது | | 20,000 | | |
| சுழிய வீத வழங்கள் × கோரத்தகு உள்ளீட்டுவரி / விலக்கபட்டவழங்கல் தவிர்ந்த மொத்த வழங்கல் | $\frac{1,500,000}{5,250,000}$ × 623,000 | 178,000 | | 198,000 |
| | | | | 445,000 |
| 100% வெளியீட்டுவரி அடிப்படைமீதி | | | | 412,500 |
| கோரக்கூடிய மொத்தஉள்ளீட்டுவரி (198,000-412,500) | | | | **610,500** |
| வரிமீளளிப்பு 412,500 – 610,500 | | | | 198,000 |
| மீதிஉள்ளீட்டுவரி கீழ்க் கொண்டுவந்தது (643,000 – 610,500) | | | | 32,500 |

## எளிதாக்கப்பட்ட பெறுமதிசேர் வரி(Simplified Value added tax scheme)

இம்முறையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இருவகையினர்

- பதியப்பட்ட இனங்காணப்பட்ட கொள்வனர்
- பதியப்பட்ட இனங்காணப்பட்ட வழங்குனர்

பதியப்படத்தகுதியுடையவர்கள்

i. பொருட்கள்,சேவைகளின் ஏற்றுமதியாளர்கள்/சுழிய வீத வழங்குனர்.
ii. குறிக்கப்பட்டசெயற்றிட்டங்களில் ஈடுபடும் பதியப்பட்டவர்கள்.
iii. பிரிவு 22 இன் கீழ் பதியப்பட்டவர்கள்
iv. ஏற்றுமதியாளருக்குவழங்கும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தியாளர்கள்.
v. ஏற்றுமதிசெய்யப்படும் பொருட்களின் தரம், பண்பு, பெறுமதியை அதிகரிக்கச் செய்யும் பெறுமதிசேர் சேவைகளை வழங்கும் வழங்குனர்கள்.

இவ் வழங்கல் நீக்கப்பட்டவரிவிதிவழங்கலாகவரித்திரட்டில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

பதியப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனர் எளிமையாக்கப்பட்ட பெறுமதிசேர் வரிவரவுக் கைச்சாத்தை அவ் வழங்கல் தொடர்பில் பதியப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்க்கு வழங்குவார்.

ஏளிமையாக்கப்பட்ட பெறுமதிசேர் வரிவரவுக் கைச்சாத்தில் உள்ள தொகையை பதியப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர் தனது வரிப் பொறுப்பிலிருந்து குறித்தவரிவிதி காலத்தில் கழிக்க முடியும்.

**உதாரணம் 4**

31-12-2015 இல் முடிவடைந்த காலாண்டுக்கான சுரி நிறுவனத்தின் வழங்கல் தொடர்பான விபரங்கள்

| | |
|---|---|
| நேர் ஏற்றுமதி | ரூ. 2,100,000 |
| ஏற்றுமதியாளனுக்கு விற்பனை–எளிபொ.சே.வுஅடிப்படையில் | ரூ. 1,275,000 |
| உள்ளூர் விற்பனை–வரிவிதி | ரூ. 4,125,000 |
| | ரூ. 7,500,000 |
| உள்ளீட்டுவரி விபரங்கள் கீழ்வருமாறு | |
| மூலப்பொருள் இறக்குமதியில் | ரூ. 290,000 |
| உள்ளூர் கொள்வனவில் | ரூ. 35,000 |

31-12-2015 முடிவடைந்தகாலாண்டுக்கான நிலுவைவரியை கணிக்க.

விடை

வெளியீட்டு வரி

| | | | |
|---|---|---|---|
| சுழியவீதவழங்கல் - ஏற்றுமதி | ரூ. 2,100,000×0% | | - |
| நீக்கப்பட்டவழங்கல் - ஏற்றுமதிக்குவிற்பனை | ரூ. 1,275,000 ×11% | | 140,250 |
| வரிவிதிவழங்கல் - உள்ளூர் விற்பனை | ரூ. 4,175,000×11% | | 453,750 |
| | | | 594,000 |

உள்ளீட்டுவரி

| | | |
|---|---|---|
| மொத்தஉள்நாட்டுவரி | 325,000 | |
| மட்டுப்பாடின்றிகோரக்கூடியஉள்ளீட்டுவரி | | |

சுழியவீத வழங்கள் +எளிபெ.சே.வரி வழங்கல்× கோரக்கூடிய வரி
மொத்த வழங்கல்

(2,100,000 + 1,275,000)× 325,000
7,500,000 — 146,250

| | | |
|---|---|---|
| 100% வரிவிதி வழங்கல் மீதான வெளியீட்டுவரி அடிப்படையில் மீதி | 178,750 | |
| மொத்த கூறக்கூடியஉள்ளீட்டுவரி | | **325,000** |
| நிலுவைவரி (594,000 – 325,000) | | 269,000 |
| கழி :எளி.பெ.சே வரவு கைச்சாத்து | | **140,250** |
| மீதி நிலுவை | | 128,750 |

**உதாரணம் 5**

31-12-2015 இல் முடிவடைந்தகாலாண்டுக்கானபொசிகம்பனியின் விபரங்கள்

| | |
|---|---|
| நேர் ஏற்றுமதி | ரூ. 2,822,800 |
| ஏற்றுமதியாளனுக்குவிற்பனை–எளி.பெ.சே.வரிமுறை | ரூ. 1,850,000 |
| உள்ளூர் ஏற்றுமதி - விலக்கு | ரூ. 1,416,000 |
| உள்ளூர் ஏற்றுமதி–வரிவிதி | ரூ. 5,711,200 |
| | ரூ.11,800,000 |

உள்ளீட்டு வரி விபரங்கள் கீழ்வருமாறு

| | |
|---|---|
| மூலப் பொருள் இறக்குமதி மீது | ரூ. 583,000 |
| உள்ளூர் கொள்வனவுமீது | ரூ. 513,000 |
| முதன்மை நிறைவேற்று அதிகாரியின் மகிழுர்ந்தின் | ரூ. 20,000 |

- இக் காலாண்டில் மீதி கீழ் கொணரப்பட்ட கோரப்படாத பெ.சே.வ 28,000 ஆகும்.
- நிறுத்தப்பட்ட வரிவிதி வழங்களுக்கு 195,000 பெறுமதியான எளிதாக்கப்பட்ட பெறுமதிசேர் வரி கைச்சாத்துகம்பனியால் பெறப்பட்டுள்ளது.

- பெறப்பட்ட வழங்கலுக்காக செலுத்தப்படட்ட வரி ஏற்றுமதிக்கும் உள்ளூர் வழங்களுக்கும் சமமாகபகிரப்படும் என அனுமானிக்க. 31-12-2015 இல் இல் முடிவடைந்த காலாண்டுக்கான நிலுவைவரியை கணிக்க.

விடை

| | | | |
|---|---|---|---|
| சுழியவீதவழங்கல் - ஏற்றுமதி | 2,822,800 ×0% | - | |
| நீக்கப்பட்டவழங்கல் - ஏற்றுமதிவிற்பனை | 1,850,000 ×11% | | 203,500 |
| வரிவிதிஉள்ளூர் வழங்கல் | 5,711,200 ×11% | | 628,232 |
| விலக்கப்பட்டஉள்ளூர் வழங்கல் | 1,416,000 | | - |
| | 11,800,000 | | **831,732** |
| உள்ளீட்டுவரி | | | |
| மூலப்பொருள் இறக்குமதியில் | | | 583,000 |
| உள்ளூர் கொள்வனவில் | | | 319,000 |
| மகிழுர்ந்துக் காப்புறுதிக்கு | | | 20,000 |
| | | | 922,000 |
| கழி: அனுமதிக்கத்தகாத உள்ளீட்டுவரி–காப்புறுதி | | | (20,000) |
| | | | 902,000 |
| கழி: விலக்கப்பட்டவழங்களுக்கானஉள்ளீட்டுவரி | 1,416,000 × 902,000 / 11,800,000 | | (110,640) |
| அனுமதிதகுஉள்ளீட்டுவரி | | | 791,360 |
| முன் கொணர்ந்தஉள்ளீட்டுவரி | | | 28,000 |
| | | | 819,360 |
| கட்டுப்பாடின்றிகோரக்கூடியது | 4,672,800 × 791,360 / 10,384,000 | 356,112 | |
| மீதிகோரக்கூடியது | 628,232 or 463,248 | 463,248 | |
| முன் கொண்டுசெல்லப்படும் உள்ளீட்டுவரி | | | **819,360** |
| வரிநிலுவை | | | 12,372 |
| கழி: எளி.பெ.சே.வரிகைச்சாத்து | | | (195,000) |
| மீளளிப்பு மீதி | | | **(182,628)** |

குறிப்பு : இக் கட்டுரை 31-12-2015 ஆம் ஆண்டுவரையான மாற்றங்களை உள்ளடக்கியது 2016 ஆம் ஆண்டுக்கான முன்மொழிவுகள் கருத்தில் கொள்ளப்படவில்லை